Judicial Form No.53
( See Rule 42 )
**DEPOSITION OF WITNESSES**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATHUR**
**Case No. CC. No. 136/2024**
**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2 Page.No.**

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ம் நாள் செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.2 வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி. மீனா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேலாயுதம் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ஆறுமுகம் | தொழில் | Forest Range Officer ( Rtd) |
| ஊர் | ஆலங்காயம் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 72 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 08th day of April 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :</u>** **எதிரி ஆஜர்**

நான் வனத்துறையில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து 30.06.2011 அன்று ஓய்வு பெற்றுவிட்டேன். சுமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பாக, தேதி ,மாதம் நினைவில்லை. எங்கள் ஊரான ஆலங்காயத்தில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியில் இருந்த மரங்களை யாரோ வெட்டி எடுத்து சென்று விட்டதாக பேசிக்கொண்டார்கள். ஆனால் எனக்கு இது சம்மந்தமாக வேறு எந்த விவரமும் தெரியவில்லை. யாரும் என்னை விசாரிக்கவும் இல்லை. இந்த வழக்கில் நான் சாட்சியாக உள்ளேன் என்ற விவரம் எனக்கு நேற்று காவல் துறையினர் சாட்சி சம்மன் வழங்கிய போது தான் தெரியவந்தது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை சாட்சியாக விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

ஆஜர் எதிரி, ஆலங்காயம் அரசு தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியர் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த பள்ளியில் உள்ள மரங்கள் தான் வெட்டப்பட்டதாக ஊரில் பேசிக்கொண்டார்கள் என்றால் சரிதான். கார்பெண்டர் ஜெயசீலன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் ஆலங்காயத்தை சேர்ந்தவர். ஆஜர் எதிரியான தலைமை ஆசிரியர் துரை மற்றும் கார்பெண்டர் ஜெயசீலன் ஆகியோர் என்னை சந்தித்து பள்ளியில் உள்ள சில மரங்கள் காய்ந்து போய் உள்ளது அவை விழுந்தால் மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் நான் முன்னாள் வனத்துறை அலுவலர் என்ற முறையில் அந்த மரங்களை வெட்டுவதற்கான உரிய சட்ட வழிமுறை குறித்து ஆலோசனை செய்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு யாரும் என்னை சந்தித்து ஆலோசனை கேட்கவில்லை. கடந்த 05.10.2023 அன்று பள்ளி வளாகத்தில் இருந்த தேக்கு மரங்களை கார்பெண்டர் ஜெயசீலன் வெட்டி எடுத்து சென்று விட்டார் என்றும் அதற்கான தொகையாக ரூ. 1,80,000 /– ஐ ஆஜர் எதிரி பெற்றுக்கொண்டார் என்றும் சொன்னால் சரியல்ல. அப்படி யாரும் என்னிடம் கூறவில்லை. நான் போலீசார் விசாரணையில் மேற்கண்டவாறு கூறிவிட்டு தற்சமயம் மாற்றி கூறுகிறேன் என்றால் போலீசார் என்னை இந்த வழக்கில் விசாரிக்கவே இல்லை. ஆஜர் எதிரியும் கார்பெண்டர் ஜெயசீலனும் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை இல்லை தெரிவித்தார் எனவே குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

சாட்சியின் கையொப்பம்